முருகப்பெருமான் துணை

**மகான் குறும்பைச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.06.2023**, திங்கட்கிழமை

1. யோகராஜனே தரும வள்ளலே
   உயிர்கொலை நீக்கி வாழவே
   செகத்தில் சன்மார்க்கம் அருளி
   சித்தி தருகின்ற ஞான வள்ளலே
2. வள்ளலே அரங்கனே உமை போற்றி
   வழங்குவேன் அறிவுரை ஆசி
   சொல்லவே சோபகிருது விடை திங்கள்
   சுருதிபடி இருபானீர் திகதி சோமவாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 22 ம் நாள், 05.06.2023, திங்கட்கிழமை)

3. வாரமதில் குறும்பைச் சித்தர் யானும்
   வையகம் பாதுபாப்புற உரைப்பேன்
   சோரமிலா ஞானப்படைகள்
   சுத்தநெறி வழி வர வேண்டுமென
4. வேண்டுமென அற்புதம் நடத்தும்
   வேலவன் வழிபாடு தன்னை
   உண்டான கலியுக மக்கள்
   உடன் ஏற்று வணங்கியே
5. வணங்கியே உண்மைபட வழிபாடு
   வல்லமைபட சரணாகதியாக
   இணங்கிச் செய்துவர மாற்றம்
   இணையிலா வேலவன் சக்தியாக
6. ஆகவே மக்களிடை தேறி
   அரங்கனால் யாவும் நடக்கும்
   வகைபட அரங்கன் வகுத்த
   வரையறை கொண்ட தொண்டர்கள்
7. தொண்டர்கள் கட்டமைப்பை
   தேசமதில் முருகா என படைத்து
   உண்டாக்க வேணும் செயல்வடிவை
   உயர்வாகச் செய்து வருக

8. வருகவே உலகம் எங்கிலும்
வளர்ச்சி நிலையாக மாறி
தரும தான சிந்தை வடிவிலே
தலைமைகள் எங்கும் தேர்வாகி

9. ஆகியே வருங்காலமதில்
அமைந்திடும் ஞான சபை
அகிலம் எங்கிலும் வேலவன்
அடியவர்கட்கே பதவி வாய்ப்பாகி

10. ஆகியே எங்கும் எதிலும்
ஆறுமுகனார் வெளிப்பட
அகிலம் பாதுகாப்பை பெறும்
அனைத்தும் சேவை குன்றா வண்ணம்

11. வண்ணமுடன் நிலைகள் கூடி
வருங்காலம் மாற்றம் காணும்
அண்ணல் சீடர்கள் செயல்வடிவு
ஆற்றலாக களம்காண அமையும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—